සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

ශ්‍රේණිය / தரம் / Grade: 13	විෂයය / பாடம் / Subject: வணிகக்கல்வி Business Studies	පත්‍රය / வினாத்தாள் / Paper: I	පැය / மணித்தியாலம் / Hours: 2

1 முதல் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1) தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பான சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

அ – வரையறுக்கப்படாதவை.

ஆ - சமூக சக்திகளால் மாற்ற முடியாதவை.

இ - தனிநபருக்கு உரியவை.

ஈ - வணிகர்களால் உருவாக்கப்படக்கூடியவை.

உ - அனைவருக்கும் பொதுவானவை.

ஊ - உயிர் வாழ்வதற்கு கட்டாயமாக பூர்த்தி செய்யப்பட வேண்டியவை.

மேலுள்ள பண்புகளில், விருப்பங்களுக்கு மாத்திரம் பொருந்தும் பண்புகளைக் கொண்ட சரியான தெரிவு எது?

1. அ, இ, ஊ 2. அ, இ, ஈ 3. ஆ, இ, ஈ
4. அ, ஈ, உ 5. ஆ, உ, ஊ (..............)

2) கீழே தரப்பட்டுள்ள பண்புகளிலில் பொருட்களுக்குரிய பண்பு ஒன்றாக அமைவது,

1. வழங்குநரைப் பொறுத்து மாறுபடும்.
2. உற்பத்தியில் ஓத்த தன்மை காணப்படமாட்டாது.
3. வழங்குநரிடமிருந்து பிரித்து வழங்க முடியும்.
4. பௌதீக ரீதியான இருப்பு இல்லை.
5. களஞ்சியப்படுத்த முடியாது. (..............)

3) கூற்று A– வணிக பரிணாம வளர்ச்சியின் முதலாவது கட்டம் பண்டமாற்று முறையாகும்.

கூற்று B– நேரில் உற்பத்தியின் விளைவாக மிகை உற்பத்தி ஏற்பட்டதுடன் அதனையடுத்து பரிமாற்ற பொருளாதாரமும் உருவானது.

மேலுள்ள கூற்றுகளில் சரியானது எது அல்லது சரியானவை எவை?

1. A சரியானது, B தவறானது.
2. A தவறானது, B சரியானது
3. B கூற்று A-ஐ உறுதிப்படுத்துகிறது
4. A மற்றும் B ஆகிய இரண்டும் சரியானவை, ஆனால் அவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை.
5. A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானவை. (..............)

4) நுகர்வோர் தாம் செலுத்தும் பணத்திற்கு திருப்தியை பெற்றுக்கொள்ளும் வகையில் தரமான பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்யும் உரிமையை நேரடியாக உறுதிப்படுத்தும் நுகர்வோர் உரிமை எது?
   1. தகவல் அறியும் உரிமை
   2. தெரிவு செய்வதற்கான உரிமை
   3. நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை
   4. அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் உரிமை
   5. நுகர்வோர் கல்வி பெறும் உரிமை (..............)

5) நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வணிகங்கள் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

   A. மூலப்பொருள் மற்றும் கழிவு முகாமைத்துவம்
   B. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
   C. மக்களுக்கு சம வாய்ப்புகள் வழங்குதல்
   D. இடர் முகாமைத்துவம்
   E. வறுமையை குறைத்தல்
   F. சர்வதேச வர்த்தகம்

   நிலைபேறான சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் விடயங்களை கொண்ட விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

   1. B, D, F   2. A, D, E   3. B, C, E   4. A, C, F   5. B, C, D (..............)

6) வணிகமொன்று தனது உரிமையாளர்களுக்கு நியாயமான உழைப்பினை பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நேரடி செயற்பாடானது பின்வருவனவற்றுள் எது?
   1. சமூக நல சேவைகளில் ஈடுபடல்.
   2. பசுமை உற்பத்தியில் ஈடுபடல்.
   3. பயனுள்ள முதலீடுகளில் பணம் முதலீடு செய்தல்.
   4. ஊழியரகளின் தொழிற் திருப்தியை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.
   5. கழிவு முகாமைத்துவம் (..............)

7) முற்பண தனியாள் வருமான வரி APIT (Advance Personal Income Tax) தொடர்பான தவறான கூற்றைத் தெரிவு செய்க.
   1. இது ஒரு நேரில் வரி ஆகும்.
   2. இது ஒரு நேர் வரி ஆகும்.
   3. இது ஒரு வகை வருமான வரி ஆகும்.
   4. இதை உள்நாட்டு வருமான வரித் திணைக்களம் வசூலிக்கிறது
   5. தொழலாளர்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாமல் குறித்த கால எல்லைக்குள் தொழிலாளரின் சம்பளத்திலிருந்து குறைப்பதற்கு தொழில் வழங்குனருக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (..............)

8) வரையறுக்கப்பட்ட தனியார் மற்றும் பொது கம்பனிகளின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

   A. குறைந்தபட்ச இயக்குனர்களின் எண்ணிக்கை ஒன்று
   B. பங்குகள், பிணைப் பத்திரங்களை பகிரங்கமாக வழங்க முடியும்.
   C. பங்கிலாபம் வழங்குவதற்கு முன் கடன் தீர்ப்பனவு ஆற்றல் சோதனை இடம்பெறல் வேண்டும்.
   D. பங்குதாரர்களின் எண்ணிக்கை 1 முதல் 50 வரை ஆகும்
   E. கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்ய முடியும்

   வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளுக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

   1. A, B, D   2. B, D, E   3. B, C, E   4. A, C, D   5. C, D, E (..............)

9) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை அடையாளப்படுத்தும் நிறுவனங்கள்:

A. கைத்தொழில் அபிவிருத்திச் சபை

B. இலங்கை மத்திய வங்கி

C. குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம்

D. சிறு கைத்தொழில் திணைக்களம்

E. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

மின்சார பயன்பாடு மற்றும் பணியாளர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சரியான விடை:

1. B, E   2. A, B   3. C, E   4. B, D   5. B, C   (.............)

10) வங்கிகளில் காணப்படும் பொதுமக்களின் கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் நிலுவையானது,

1. அண்மிய பணம்   2. வங்கிப் பணம்   3. இலத்திரனியல் பணம்

4. கடன் பணம்   5. புழக்க பணம்   (.............)

11) சட்டரீதியான சொத்து உரிமை அற்ற நிலை பின்வரும் சந்தர்ப்பங்களுள் எது?

1. கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்கள் மீது கப்பல் நிறுவனத்திற்கு காணப்படும் உரிமை
2. கணவனின் வாழ்க்கை மீது மனைவிக்குள்ள உரிமை
3. அடகு வைக்கப்பட்டுள்ள நகைகள் மீது நகை அடகு நிறுவனத்திற்கு காணப்படும் உரிமை
4. தனது சகோதரரின் வாழ்க்கை மீது வியாபாரி ஒருவருக்கு காணப்படும் உரிமை
5. கடன்பட்டோனின் வாழ்க்கை மீது கடன்கொடுத்தோனுக்கு காணப்படும் உரிமை   (.............)

12) வெவ்வேறு தொடர்பாடல் ஊடகங்களும் அவற்றுக்கான உதாரணங்கம் கீழே தரப்பட்டுள்ளன:

	எழுத்து	வாய்மொழி	குறியீடுகளும் சமிக்ஞைகளும்
உள்ளக	அறிக்கை .... A	உள்ளக கூட்டம் .... B	.... C ... ... நிறுவன அமைப்பு வரைபடம்
வெளியக	.... D ... ... சுவரொட்டி	பொதுசன கூட்டம் .... E	.... F ... ... வீதி சமிக்ஞை விளக்குகள்

மேற்படி இடைவெளிகளுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. A:-செய்தித்தாள்   B-குரல் அஞ்சல்   C:-ஆம்புலன்ஸ் சமிக்ஞைகள்
   D:-நினைவுக் குறிப்புகள் (மெமோ)   E தொலைபேசி   F மணி
2. A அரச வர்த்தமானி அறிவித்தல்   B முரசு ஒலி   C வீதி சமிக்ஞைகள்
   D அறிவிப்பு பலகை   E தொலைபேசி   F வீதி சமிக்ஞைகள்
3. A நினைவுக் குறிப்புகள் (மெமோ)   B அக இணையம்   C மணி
   D செய்தித்தாள்   E நேர்காணல்   F தொகுப்பு குறியீடுகள்
4. A இதழ்   B தொலைபேசி   C வீதி சமிக்ஞைகள்
   D SMS   E முரசு ஒலி   F தொகுப்பு குறியீடுகள்
5. A பெனர்   B நினைவுக் குறிப்புகள்   C ஆம்புலன்ஸ் சமிக்ஞைகள்
   D அறிவிப்பு பலகை   E நேர்காணல்   F மணி

(.............)

13) கீழ்வரும் கூற்றுகளில் போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

1. பேருந்து தரிப்பிடமானது போக்குவரத்து பாதையின் ஒரு அங்கமாகும்.
2. விமானம் ஆனது, போக்குவரத்துக்குப் பயன்படும் சக்தியின் ஒரு அங்கமாகும்.
3. கப்பல் ஆனது, போக்குவரத்து பாதையின் ஒரு அங்கமாகும்.
4. துறைமுகமானது போக்குவரத்து தரிப்பிடத்தின் ஒரு அங்கமாகும்.
5. புகையிரத வண்டியானது போக்குவரத்து பாதையின் ஒரு அங்கமாகும். (..............)

14) வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ஒரு தடையாகக் கருதப்படாதது எது?

1. வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாட்டு முறை
2. ஒப்பீட்டு செலவுக் கோட்பாடு
3. இறக்குமதி வரி (சுங்கவரி)
4. சர்வதேச ஒப்பந்தம்
5. வர்த்தக உடன்படிக்கைகளை அமுல்படுத்துதல் (..............)

15) முதல்வரிடமிருந்து பொருட்களை பெற்றுக்கொண்டு, தன்னுடைய பெயரில் பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் முகவர் யார்?

1. முகவர் 2. தரகு முகவர் 3. காரணிகர் 4. பொறுப்பு முகவர் 5. ஏல விற்பனையாளர்

(..............)

16) திட்டமிடலில் உள்ளடங்கும் வணிக எதிர்பார்ப்புகளை சரியான ஒழுங்கு வரிசையில் வழங்கப்பட்டுள்ள பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

1. தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள், கொள்கை, இலக்கு
2. பணிக்கூற்று, தூரநோக்கு, இலக்கு, குறிக்கோள், கொள்கைகள்
3. தூரநோக்கு, பணிக்கூற்று, இலக்கு, குறிக்கோள், கொள்கைகள்
4. தூரநோக்கு, இலக்கு, பணிக்கூற்று, குறிக்கோள், கொள்கைகள்
5. தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள், இலக்கு, கொள்கைகள் (..............)

17) அதிகாரம் தொடர்பாக கீழே வழங்கப்பட்டுள்ள கூற்றுக்களுள் தவறான கூற்று எது?

1. இது பதவியால் கிடைக்கும் சட்டபூர்வமான வலுவாகும்.
2. அதிகாரத்திற்கு பல மூலாதாரங்கள் உள்ளன் அது வலுவை விட விரிவானது.
3. அதிகாரம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படலாம்.
4. பல பதவிகளுக்கும் சட்டபூர்வ அதிகாரம் உண்டு.
5. பணிகளை செய்ய உத்தரவிடவும், வழங்கவும், பொறுப்புகளை பகிரவும் உள்ள உரிமை அதிகாரமாகும்.

(..............)

18) ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் ஒழுங்கமைத்தலில் பலவீனங்கள் காணப்படுவதாக நிர்வாகம் கண்டறிந்துள்ளது. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் ஒழுங்கமைத்தலின் பலவீனமாக கருதப்படுவது,

1. பின்னூட்டல் கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்துதல்
2. ஜனநாயகத் தலைமைத்துவத்தை பின்பற்றுதல்
3. திறன் மற்றும் வளங்களை மீறி திட்டமிடுதல்
4. போதுமான மற்றும் சரியான தகவலை பயன்படுத்தாமை
5. செயற்பாடுகளை சரியாக அடையாளம் காணாமை (..............)

19) தொகுதி உற்பத்தி முறையின் சிறப்பியல்பு எது?

1. சந்தையில் இடரற்ற நிலை காணப்படல்.
2. தொகுதிக்கு தொகுதிக்கு உற்பத்திப் பொருளின் வெளியீட்டில் மாற்றங்களை செய்ய முடிதல்
3. வாடிக்கையாளரின் கட்டளையின் அடிப்படையில் தற்கால கேள்விக்கமைவாக உற்பத்தி செய்தல்
4. அதிக முதலீடு காரணமாக சிக்கல்கள் ஏற்படுதல்
5. உற்பத்தியின் பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

(..............)

20) கீழே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி சமப்பாட்டு புள்ளியில் உற்பத்தி அளவை கண்டறியவும்.

- விற்பனை அலகுகள் = 60,000
- ஒரு அலகிற்கான நேர் செலவு:
    - நேர் பொருள் = 40
    - நேர் தொழிலாளர் கூலி = 20
- நிலையான செலவு = 1,200,000
- ஒரு அலகின் விற்பனை விலை = 120

சமப்பாட்டுப் புள்ளியில் உற்பத்தியின் அளவு எத்தனை அலகுகளாகும்?

1. 20,000 அலகுகள் 2. 50,000 அலகுகள் 3. 2,000 அலகுகள்
4. 5,000 அலகுகள் 5. 10,000 அலகுகள் (..............)

21) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளுக்கான சில கருவிகள் கீழே தரப்பட்டுள்ளன

A – உறை B – பொதியிடல் C – தள்ளுபடி D – கையிருப்பு
E – மீளளித்தல் F – கொடுப்பனவு முறை G – உத்தரவாதம் H – இடைநடுவர்கள்
I – விற்பனைக்குப் பின்னரான சேவை J – விநியோக வழிமுறைகள்

மேலே உள்ளவற்றில் உற்பத்திப் பொருளுடன் மாத்திரம் தொடர்புபடும் கருவிகளின் தொகுதியை சரியாக காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. B, D, G, I 2. B, E, H, I 3. A, B, C, J 4. B, E, G, I 5. B, F, G, I (..............)

22) ஒரு வணிக நிறுவனத்தில் உள்ள அனைத்து முகாமையாளர்களும் ஊழியர்களும் தங்கள் பணிகளை சந்தைப்படுத்தல் செயற்பாட்டுடன் ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறப்படுவது எது?

1. உள்நாட்டு சந்தைப்படுத்தல் 2. உறவு சந்தைப்படுத்தல் 3. ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல்
4. செயற்திறன் சந்தைப்படுத்தல் 5. சமூக சந்தைப்படுத்தல் (..............)

23) குறித்த ஒரு பொருள் உற்பத்தி நிறுவனத்தின் சில செயற்பாடுகளும் அச்செயற்பாடுகள் உள்ளடங்கும் முகாமைத்துவ கருமங்களும் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

செயற்பாடுகள்:	முகாமைத்துவக் கருமம்
1. தற்போதைய உற்பத்தி, உற்பத்திச் செயன்முறை, உற்பத்தி வடிவமைப்புப் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் அவற்றை மேம்படுத்துதலும்.	A. மனிதவள முகாமைத்துவம்
2. புதிய உற்பத்திப் பொருட்களுக்கான சுட்டுத்துண்டை வடிவமைத்தல்	B. நிதி முகாமைத்துவம்
3. தொழிற்படு மூலதனத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தல்.	C. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
4. கொடுப்பனவு முகாமைத்துவம்.	D. செயற்பாட்டு முகாமைத்துவம

மேலே தரப்பட்ட செயற்பாடுகளுக்குரிய முகாமைத்துவ தொழிற்பாடுகளைச் சரியாகப் பொருத்தும் விடை எது?

1. D, A, C, B 2. C, D, B, A 3. C, A, D, B 4. D, B, A, C 5.D, C, B, A

(..............)

24) கீழே தரப்பட்டுள்ள நிதி முகாமைத்துவத் தீர்மானங்களில் முதலீட்டுத் தீர்மானமாக அமைவது எது?

1. கடன் மூலதனத்தைப் பெறுவது தொடர்பான தீர்மானம்.
2. இலாபத்தை நிறுத்தி வைப்பது தொடர்பான தீர்மானம்.
3. வியாபாரக் கடன் கொடுத்தோர்கள் தொடர்பான தீர்மானம்.
4. செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பான தீர்மானம்.
5. வியாபாரத்தை நவீனமயப்படுத்துவது தொடர்பான தீர்மானம். (..............)

25) அட்டவணையின் X நிரலில் நிதி விகித வகைகளும், Y நிரலில் அதற்குரிய விகிதங்களும் தரப்பட்டுள்ளன.

X (விகித வகைகள்)	Y (விகிதங்கள்)
A. நடைமுறை விகிதங்கள்	1. நடைமுறை விகிதம்
B. திரவத்தன்மை விகிதங்கள்	2. இருப்புப் புரள்வு விகிதம்
C. இலாபத்தன்மை விகிதங்கள்	3. கடன் உரிமை விகிதம்
D. செயற்பாட்டு விகிதங்கள்	4. முதலீட்டின் மீதான வருவாய் விகிதம்

X நிரலை Y நிரலுடன் சரியாகப் பொருத்தும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

1. $A - 3, B - 2, C - 4, D - 1$ 2. $A - 4, B - 1, C - 3, D - 2$

3. $A - 3, B - 1, C - 4, D - 2$ 4. $A - 4, B - 1, C - 2, D - 3$

5. $A - 2, B - 1, C - 4, D - 3$ (..............)

26) பங்குச்சந்தையில் பரிமாற்றப்படும் பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் மறைமுக நன்மையாக அமைவது:

1. பங்குலாபம் கிடைத்தல்.
2. மூலதன இலாபம் கிடைத்தல்.
3. உரிமை வழங்கல்களுக்கான வாய்ப்புக் கிடைத்தல்.
4. சாதாரண பங்குதாரர்களுக்கு வாக்குரிமையும் இயக்குநராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பும் கிடைத்தல்
5. நிறுவனங்களிடமிருந்து கடன்பத்திரங்களைக் கொள்வனவு செய்த முதலீட்டாளர்களுக்கு வட்டி கிடைத்தல்.

(..............)

27) மனிதவளத் திட்டமிடல் செயன்முறையைச் சேர்ந்த சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. மனிதவள மிகை அல்லது பற்றாக்குறைக்கு எடுக்க வேண்டிய உபாயங்களை விருத்தி செய்தல்.
B. மனிதவள நிரம்பலை மதிப்பிடல்.
C. மனிதவள திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படுவதனை மதிப்பிடுதலும் மேம்படுத்துதலும்.
D. மனிதவள கேள்வியையும் நிரம்பலையும் ஒப்பிடுதல்.
E. எதிர்கால மனிதவளத் தேவைகளை எதிர்வுகூறல். (..............)

மனிதவள திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளைச் சரியான ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1. B, D, A, E, C 2. E, B, D, A, C 3. E, B, C, D, A 4. B, E, A, D, C 5. B, D, A, E, C

(..............)

28) பின்வரும் இரண்டு கூற்றுக்களையும் கருத்திற்கொண்டு சரியான விடையைத் தெரிவுசெய்க.

கூற்று 1: பயிற்சியானது சார்பளவில் ஒரு குறுகியகால நிகழ்ச்சித்திட்டமாகும்.

கூற்று 2: தற்போதைய தொழிலின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஊழியர்களைத் தயார்படுத்துவது அபிவிருத்தியின் மூலம் இடம்பெறுகிறது.

1. முதலாவது கூற்று உண்மையானது, அத்துடன் இரண்டாவது கூற்றும் உண்மையானது.
2. முதலாவது கூற்று பொய்யானது, ஆனால் இரண்டாவது கூற்று உண்மையானது.
3. இரண்டு கூற்றுக்களும் பொய்யானவை.
4. முதலாவது கூற்று உண்மையானது, ஆனால் இரண்டாவது கூற்று பொய்யானது.
5. இரண்டு கூற்றுக்களும் உண்மையானவை என்பதுடன், இரண்டாவது கூற்றின் மூலம் முதலாவது கூற்று மேலும் தெளிவுபடுத்தப்படுகின்றது. (..............)

29) கூட்டு ஒப்பந்தம் ஒன்றைப் பேணுவதன் மூலம் தொழில் வழங்குநருக்குக் கிடைக்கும் நன்மையாக அமைவது,
1. ஊழியர் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.
2. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கட்டளைச் சட்டங்களின் மூலம் கிடைக்கப்பெறும் அனுகூலங்களை விட கூடியளவு அனுகூலங்களை பெறக்கூடியதாக இருத்தல்.
3. தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. எதிர்காலத்தில் விசுவாசமான மற்றும் திருப்தியான ஊழியர் படையொன்றை உருவாக்கிக் கொள்ள முடியுமாக இருத்தல்.
5. தமது உரிமையையும் அதேபோன்று இலாபத்தையும் தெளிவுபடுத்திக் கொள்ள முடியுமாக இருத்தல். (..............)

30) தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறையின் பணிகளைச் சரியான ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க:
1. தெரிவுசெய்தல், வகைப்படுத்தல், கணித்தல், சுருக்கிக் கூறுதல்
2. கணித்தல், தெரிவுசெய்தல், சுருக்கிக் கூறுதல், வகைப்படுத்தல்
3. வகைப்படுத்தல், கணித்தல், தெரிவுசெய்தல், சுருக்கிக் கூறுதல்
4. வகைப்படுத்தல், தெரிவுசெய்தல், கணித்தல், சுருக்கிக் கூறுதல்
5. தெரிவுசெய்தல், கணித்தல், சுருக்கிக் கூறுதல், வகைப்படுத்தல் (..............)

31 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை கொண்டு இடைவெளி நிரப்புக.

31) அ. மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ………………………………………………. மற்றும் ……………………………………………………………………… உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆ. வளங்களுக்கு பெறுமதியளித்தல்……………………. இன் பிரதான …………………………ஆகும்.

32) அ. வணிக நிறுவனமொன்றினுள் காணப்படுவதும், வணிகக் கருமங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான ……………………………………. மற்றும் ………………………………………. அகச்சூழல் ஆகும்.

ஆ. ஒரு வணிகத்தின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிகங்கள் தமது ………………………….. மற்றும் ………………………….. ஆகியவற்றை அடையாளம் காண முடியும்.

33) அ. முதல்நிலை வணிகர்களின் பிரதான கருமம் ……………………………ஐ ……………………………… சந்தையில் கொள்வனவு செய்து விற்பனை செய்வதாகும்.

ஆ. அரச ஊழியர் நம்பிக்கை நிதியம் ……………………………………. மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தை நிர்வகிக்கும் பொறுப்பு ………………………………………….. இடம் காணப்படுகிறது.

34) அ. ……………………………………….. சேவைகள் மற்றும் ………………………………….. சேவைகள் என்பன வணிக வங்கிகள் வழங்கும் இரண்டு முக்கிய சேவைகளாகும்.

ஆ. வங்கி மேலதிகப் பற்று வசதிகள்…………………………….. மற்றும் …………………………………... என்றவாறு இரு வகைகளில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன.

35) அ. பணவீக்கம் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை நிலையாக வைத்திருப்பது ……………………….............நிலைத்தன்மை எனவும், பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்க்கூடிய ஆற்றல் ……………………….………... நிலைத்தன்மை எனவும் அழைக்கப்படுகிறது.

ஆ. காசோலையில் அச்சிடப்பட்டுள்ள ‘‘அல்லது கொண்டு வருபவருக்கு’’ என்ற சொற்கள் நீக்கப்படாமல் இருந்தால் அது …………………………….... காசோலை எனவும், அவை நீக்கப்பட்டிருந்தால் அது …………………….... காசோலை எனவும் அழைக்கப்படுகிறது.

36) அ. முகாமையாளர் ஒருவருக்கு அதிகாரம் கிடைக்கும் வழிமுறைகளை பிரதானமாக ……………………... மற்றும் ……………………………... என இரு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஆ. செங்குத்துத் தொடர்பாடல் ……………………………... இலிருந்து ……………………………....வரை மற்றும் ……………………………...இலிருந்து ……………………………....வரை நடைபெறுகிறது.

37) அ. உற்பத்திச் செயன்முறை தொடர்ச்சியாக இடம்பெறுவதற்காக ……………………….……………....ஐ ……………………………………………………இல் பேணுதல் இருப்புக் கட்டுப்பாடாகும்.

ஆ. நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத்திப் பொருளுக்கு உள்ள ஆற்றலைப் பற்றிய நுகர்வோரின் மொத்த மதிப்பீடு ……………………... ஆகும். நுகர்வோருக்கு தாம் எதிர்பார்த்தபடி பொருளை உற்பத்தி செய்து வழங்குவதன் மூலம் நுகர்வோர் அடையும் ……………………………... திருப்தியாகும்.

38) அ. செயற்றிறன் வாய்ந்த சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்களையும், செயல்முறைகளையும் வடிவமைக்கும் போதும் செயற்படுத்தும் போதும் சமூகப் பொறுப்புகள், ……….…………………………….... மற்றும் …………………………………………. குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

ஆ. இலங்கையில் வணிக நிறுவனங்கள் தங்களது வியாபாரச் சின்னங்களை .... சட்டத்தின் கீழ் .... அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

39) அ. ஒரு வணிகத்தின் நிதித் தேவைகள் ……………………………... மற்றும் ……………………………... என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

ஆ. ஊழியர்களை நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளலானது, ………………………………………. மற்றும் ………………………….………………...... என்ற இரு அடிப்படைகளில் நடைபெறுகிறது.

40) அ. கைத்தொழில் உறவுகள் தொடர்பாக தொழில் தருனர் மற்றும் தொழிலாளர் தரப்புகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் உடன்பாடு ……………………………... ஆகும். கைத்தொழில் பிரச்சினையொன்று காணப்படும் போது தொழில் வழங்குனரால் மேற்கொள்ளப்படும் அழுத்தத்திற்கு எதிராக தொழிற்சங்கங்கள் பயன்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் ……………………………………... ஆகும்.

ஆ. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பன ………..…………………………... மற்றும் …...……………………………... போன்ற பல துறைகளின் ஒருங்கிணைப்பாகும்.

41 முதல் 50 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை வழங்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

41) தற்காலத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் வணிகத் துறையில் ஏற்பட்டுள்ள நான்கு போக்குகளை எழுதுக.

……

……

……

……

42) உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறையில் காணப்படும் நான்கு வணிகச் செயற்பாடுகளை எழுதுக.

……

……

……

……

43) முதலீட்டு முகாமையாளர்கள் பொதுமக்களுக்கு வழங்கும் நான்கு சேவைகளை எழுதுக.

……

……

……

……

……

44) பொறுப்புக் காப்புறுதியின் கீழ் பெறக்கூடிய நான்கு வகை பொறுப்புக் காப்புறுதிப் பத்திரங்களின் பெயர்களை எழுதுக.

……

……

……

……

……

45) கட்டுப்பாட்டு செயன்முறையின் படிமுறைகளை எழுதுக.

……

……

……

……

……

46) தொழிற்சாலை தளஅமைப்புத் திட்டங்களின் நான்கு வகைகளினதும் பெயர்களை எழுதுக.

……

……

……

……

47) பல்வேறு வர்த்தகச் சின்னங்களின் (Brands) நான்கு வகைகளின் பெயர்களை எழுதுக.

....

....

....

....

....

48) கொழும்பு பங்குச் சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு வகை பத்திரங்களின் பெயர்களை எழுதுக.

....

....

....

....

....

49) கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கங்களின் முழுப் பெயர்களை எழுதுக.

CSE : ....

BTC : ....

ADB : ....

ESS : ....

50) சர்வதேச நாணய நிதியம் (IMF) நிறுவப்பட்டதன் நான்கு நோக்கங்களை எழுதுக.

....

....

....

....

....